இராணுவத்தில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி 5 போர்களில் பங்கேற்றவரும், இந்திய இராணுவத்தில் ஃபீல்டு மார்ஷல் என்ற தகுதியைப் பெற்ற இருவரில் முதலாமவரும், பத்ம பூஷன், பத்ம விபூஷன் போன்ற உயரிய விருதுகளைப் பெற்றவருமான முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி ஃபீல்டு மார்ஷல் திரு. மானேக்ஷா அவர்கள், 27–6–2008 அன்று தனது 94–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சித் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் மூத்த தலைவரும், பழம்பெரும் சுதந்திரப் போராட்ட வீரரும், சிறந்த நாடாளுமன்றவாதியும், வயதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் பொதுத் தொண்டிற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவருமான திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்கள், 1–8–2008 அன்று தனது 92–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 9–35

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)